கிருஷ்ணகிரியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

* 3889 டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருஷ்ணகிரியில் பேருந்து நிலையம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(9-40)

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி நகராட்சி பேருந்து நிலையம் அமைப்பதற்காக கட்டிகானப்பள்ளி கிராமம் ச.எ. 72/2-எ, 73/6, 73/7-எ மற்றும் 73/8 எ ஆகிய நிலங்களைத் தேர்ந்தெடுத்து அதில் பேருந்து நிலையம் அமைக்குமாறு 8—6—1989 நாளிட்ட ந.நி.ம.கு.வ. துறை, அரசாணை நிலை எண் 339-ல் அரசு, கிருஷ்ணகிரி நகராட்சிக்குத் தகுந்த ஆலோசனை அளித்துள்ளது. ஆனால் அவ்வாலோசனையை கிருஷ்ணகிரி நகர் மன்றம் ஏற்கவில்லை. இரயில்வே காலனி பகுதியில் (இரயில்வே புறம்போக்கு நிலம்) புதிய பேருந்து நிலையத்தை அமைக்க அந் நகர் மன்றம் விரும்புகிறது.

டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் கட்டவேண்டுமென்ற கோரிக்கையில் இடத்தைப் பொறுத்தவரையில் சர்ச்சைக்குரிய பிரச்சினையாக்கப்பட்டு அது 10 ஆண்டுகளாக தள்ளிப் போடப் பட்டுக் கொண்டே வருகிறது. அரசு நடவடிக்கை எடுத்து கிருஷ்ணகிரி நகராட்சிக்கு பேருந்து நிலையம் கட்டித் தர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரைக்கும் கிருஷ்ணகிரி நகராட்சி பேருந்து நிலையம் விரைவில் கட்டப்பட வேண்டு மென்றுதான் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இடத்தைத் தேர்ந்தெடுப்பது அந்த நகர்மன்றம் மற்றும் அந்த மக்களுடைய பிரச்சினையாக இருக்கிறது. இப்போது கட்டி கானபள்ளி கிராமத்தில் கட்டலாம் என்று நாங்கள் அனுமதித்து

1989 அக்டோபர் 31]

விட்டோம். ஆனால் நகர்மன்றம் அதை ஏற்கவில்லை. இது பற்றி அந்த நகர்மன்றத்திடம் விவரம் கேட்கப்பட்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நகராட்சியைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கின்ற ஒரு சில உறுப்பினர்கள் வேண்டுமென்றே சர்ச்சையைக் கிளப்பி, எங்களுடைய நகராட்சிக்குப் பேருந்து நிலையம் அமைவதற்குத் தடங்கல் ஏற்படுத்தி வருகிறார்கள். ஏற்கெனவே இரண்டு மூன்று முறை மாவட்ட ஆட்சித்தலைவர், பொதுமக்கள், மற்றும் மக்கள் பிரதிநிதிகளையும் சேர்த்து வைத்துக் கொண்டு பேசியிருக்கிறோம். இருந்தாலும் நாங்கள் சரியான முடிவுக்கு வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. அரசு இதனைக் கருத்தில் கொண்டு விரைவாக ஒரு முடிவை அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் பேருந்து நிலையம் கட்டுவதற்கான இடத்தையும் தெரிவித்து அனுமதியும் வழங்கியது. ஆனால் கிருஷ்ணகிரி நகரமன்றம் தான் அதை ஏற்கவில்லை. நகரத்தில் இருக்கக்கூடிய பொது மக்கள் இந்த அரசு நல்லதைச் செய்ய முன் வந்தாலும் அந்த நகரமன்றத்தில் உள்ளவர்கள் ஏற்க மறுப்பதைப் பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள்.

திரு. எம். மோசஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கும் பேருந்து நிலையங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. குறிப்பாக நாகர்கோயிலில் உள்ள அண்ணா பேருந்து நிலையத்தில் குண்டும் குழியுமாக இருக்கின்றன. மக்கள் நூதன போராட்டம் என்று நடத்தி அவைகளைப் படம் பிடித்து பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. இப்படி மிகவும் மோசமான பேருந்து நிலையங்களைச் சீர்படுத்திச் செப்பனிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே. அதைப் பற்றிய விவரம் இப்போது எண்ணத்தில் இல்லை.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதிக்குட்பட்ட அன்னூர் பெரிய நகர மாகும். அங்கு பஸ் நிலையம் ஒன்று கட்ட வேண்டுமென்பது மக்களின் நீண்டநாள் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : பேரவைத் தலைவர் அவர் களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசி நகரம் ஒரு முக்கிய நகரம். அந்த நகரத்தில் இப்போதிருக்கிற பேருந்து நிலையத்தில் மிகப் பெரிய நெருக்கடி இருக்கிறது. ஆகவே புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு அர சிடம் இருக்கிறதா? அதற்குரிய நிலத்தை கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தென்காசியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் கதிரவன் அவர்கள் அங்கு பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அரசு நிலம் கையகப்படுத்த விரைவான நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தில் point of order இல்லை.

(9-45)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் கட்ட வேண்டுமென்று சொன் னால் பொதுவாக நகரங்களில் சரியான இட வசதி இல்லாத நிலைமையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் புறம்போக்கு நிலங்கள், அல்லது கோயில் நிலங்கள்

1989 அக்டோபர் 31]

எங்கெங்கு இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளில் பேருந்து நிலையங்களை அமைக்க வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவை அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பொதுவான ஒரு உத்தரவை அப்படி வழங்க இயலாது. எங்கு பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வருகிறதோ அந்தப் பகுதிகளில் பேருந்து நிலையம் அமைக்கிறபோது பொது மக்களுடைய நலனையும் கருத்தில் எடுத்துக்கொண்டு அந்த அடிப்படையில்தான் இடத்தையும் தேர்ந்து எடுக்கிறோம். ஆகவே ஒரு பொதுவான உத்தரவை வழங்க இயலாது.

திரு. ந. நஞ்சப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் சுற்றுலா மையமாக இருக்கிறது. ஆயினும் அங்கு பேருந்து நிலையம் இல்லை. இதனால் வெளி மாநிலங்களிலிருந்து வந்திருக்கிற மக்களும் அவதிப்படுகிறார்கள். வாகனங்களைக்கூட நிறுத்த முடியவில்லை. ஆகவே சுற்றுலா மையமான ஒகேனக்கல்லில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அதுபோன்ற பரிசீலனை அரசாங்கத்திடம் இல்லை.

அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கம்.

*2953 **திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டம் அனுமன் நதியின் குறுக்கே அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.